அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை: 24/2014

எனது இல.:EST 5/1/49
அரசாங்க நிர்வாக மற்றும்
உள்நாட்டலுவல்கள் அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு 07.

2014.11.12

அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாகாணங்களின் பிரதம செயலாளர்கள்
திணைக்களங்களின் தலைவர்கள்
அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச்சட்டச் சபைகளின் தலைவர்கள்

## 2015 வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம்பெறுபவர்களுக்கான இடைக்காலக் கொடுப்பனவுகளை வழங்குதல்

அரசாங்கத் துறையினருக்காக 2015 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகள் மூலம் அரசாங்கத்தினால் முன்மொழியப்பட்ட புதிய சம்பளக் கட்டமைப்பு 2015.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் நடைமுறைப்படுத்தப்படும். மேலும் ஓய்வுபெற்ற அரசாங்க ஊழியர்களின் ஓய்வூதிய சம்பளங்களும் புதிய சம்பளக் கட்டமைப்புக்கு இணங்க திருத்தப்பட்டு 2015.01.01 ஆந் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் புதிய ஓய்வூதிய சம்பளம் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

02. உத்தேச சம்பளக் கட்டமைப்பின் கீழ் நிறைவேற்றுத் தர ஊழியர் வகுதிக்கு கீழ் உள்ள உத்தியோகத்தர்களுக்கு 2015.01.01 ஆந் திகதி முதல் 2015.06.30 ஆந் திகதி வரையான காலப் பகுதிக்கான நிலுவைச் சம்பளம் 2015 யூலை மாதச் சம்பளத்துடன் செலுத்தப்படும். நிறைவேற்று ஊழியர் வகுதி மற்றும் அதற்குமேல் உள்ள ஊழியர்களுக்கு 2015.01.01 ஆம் முதல் 2015.08.31 ஆந் திகதி வரையான நிலுவைச் சம்பளங்கள் 2015 செப்தெம்பர் மாத சம்பளத்துடன் செலுத்தப்படும்.

03. அனைத்து உத்தியோகத்தர்களின் சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் சம்பள ஏற்றங்கள் புதிய சம்பளக் கட்டமைப்பிற்குள் சேர்க்கப்படும் வரை அரசாங்கத் துறையின் அனைத்து உத்தியோகத்தர்கள் மற்றும் ஓய்வூதியம் பெறுவோருக்காக கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு இடைக்கால மாதாந்தக் கொடுப்பனவொன்று 2014 நவம்பர் மாதத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

04. **அரசாங்க சேவை உத்தியோகத்தர்களுக்காக**

2006.04.25 ஆந் திகதி 06/2006 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கைக்கு இணங்க நிறைவேற்று சேவை வகுதியினரின் ஆரம்ப சம்பளத்தினை விட குறைந்த ஆரம்ப சம்பள படிமுறையினைக் கொண்ட மாதாந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு 2015.06.30 ஆந் திகதி வரைக்கும் அத்துடன் நிறைவேற்று சேவை வகுதியினரின் ஆரம்ப சம்பளத்தினை விட

குறையாத ஆரம்ப சம்பள சம்பள படிமுறையினைக் கொண்ட மாதாந்த சம்பள அளவுத்திட்டத்திற்கு உரித்துடைய பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு 2015.08.31ஆந் திகதி வரைக்கும் இடைக்காலக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 3,000/- செலுத்தப்பட வேண்டும்.

## 05. **முப்படைகளின் அங்கத்தவர்களுக்கு**

முப்படைகளின் அங்கத்தவர்களுக்கு இச்சுற்றறிக்கையில் 04ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாதாந்தம் ரூபா 3,000/- இடைக்காலக் கொடுப்பனவாகச் செலுத்துவது அவசியமாகும்.

## 06. **அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் சேவையாற்றும் உத்தியோகத்தர்களுக்கு**

கூட்டு உடன்படிக்கைகள் அல்லது புரிந்துணர்வு உடன்படிக்கைகள் மூலம் சம்பளங்களை வரையறுக்கும் நிறுவனங்கள் தவிர ஏனைய அனைத்து அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிச் சட்ட சபைகளில் சேவையாற்றுகின்ற பதவியணியினருக்கு மேலே 6:1 மற்றும் 6:2 ஆம் பந்திகளில் கூறப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க இடைக் காலக் கொடுப்பனவாக மாதாந்தம் ரூபா 3,000/- செலுத்தப்படுதல் வேண்டும்.

6:1 2009.06.01 ஆந் திகதிய 30(1)ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையில் உள்ளவாறு 24,725/- ரூபாவுக்கு குறைந்த ஆரம்பச் சம்பளப் படிமுறையினை மாதாந்த சம்பளத் திட்டமாகக் கொண்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு 2015.06.30 ஆந் திகதி வரைக்கும்.

6:2 2009.06.01 ஆந் திகதிய 30(1)ஆம் இலக்க முகாமைத்துவ சேவைச் சுற்றறிக்கையில் உள்ளவாறு 24,725/- ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட ஆரம்பச் சம்பளப் படிமுறையினை மாதாந்த சம்பளத் திட்டத்தைக் கொண்ட பதவிகளை வகிக்கும் உத்தியோகத்தர்களுக்கு 2015.08.31 ஆந் திகதி வரைக்கும்.

## **07. அரசாங்க சேவையில் அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்டச் சபைகளில் தற்காலிக அடிப்படையில் அல்லது நாட் சம்பள அடிப்படையில் பணி புரிகின்ற உத்தியோகத்தர்களுக்கு**

7:1 தற்காலிக அடிப்படையில் சேவையில் அமர்த்தப்பட்டுள்ள ஊழியர்களுக்கு ஏற்புடையதாகும் முறையைப் பொருத்து மேலே 04அல்லது 06ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவொன்றை செலுத்துவது அவசியமாகும்.

7:2 அமைய அடிப்படையில் நாட் சம்பளம் பெறுகின்ற ஊழியர்களுக்கு, ஏற்புடையதாகும் முறையைப் பொருத்து மேலே 04அல்லது 06ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்ட இடைக்காலக் கொடுப்பனவொன்றை, ஒவ்வொரு மாதத்திலும் சேவை புரிந்துள்ள ஒரு நாளைக்கு 1/30 என்ற அடிப்படையில் கணித்துச் செலுத்துவது அவசியமாகும்.

08. **தொழில்பயிலுநர்கள் மற்றும் பயிலுநர்களுக்கு**

2006.11.10 ஆந் திகதிய 06/2006(II)ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை இன் 14 ஆவது ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கு மேலே 04ஆம் பந்தியில் குறிப்பிட்டவாறு இடைக்கால மாதாந்த கொடுப்பனவு ஒன்றைச் செலுத்துவது அவசியமாகும்.

09. **தனிப்பட்ட பதவியணியினருக்கு**

கௌரவ அமைச்சர்களின், கௌரவ பிரதி அமைச்சர்களின் மற்றும் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுமதியளிக்கப்பட்ட தனிப்பட்ட பதவியணியினருக்கும் மாகாண சபைகளின் கௌரவ ஆளுநர்களின் கௌரவ முதலமைச்சர்களினதும் கௌரவ மாகாண சபை அமைச்சர்களினதும் அனுமதியளிக்கப்பட்ட தனிப்பட்ட ஊழியர் பதவியணியினருக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்களினதும் மாகாண சபைகளின் முதலமைச்சர்களிதும் ஒருங்கிணைப்புச் செயலாளர்களுக்கும் மேலே 04பந்தியில் குறிப்பிட்டவாறு இடைக்கால மாதாந்கக் கொடுப்பனவுகளைச் செலுத்துவது அவசியமாகும்.

10. **ஓய்வூதியம் பெறுவோருக்காக**

புதிய சம்பளக் கட்டமைப்புக்கு அமைவாக ஓய்வூதியங்களை மறுசீரமைத்து அதனை நடைமுறைப்படுத்தும் வரை ஓய்வூதியம் பெறுவர்கள் அனைவருக்கும் 2014 நவம்பர் மாதத்திலிருந்து மாதாந்தம் 2,500/- ரூபாவை இடைக்காலக் கொடுப்பனவாகச் செலுத்துவது அவசியமாகும்.

11. அரசாங்க உத்தியோகத்தர்களுக்கும் மற்றும் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் மேற்குறிப்பிடப்பட்டவாறு வழங்கப்படவுள்ள இம் மாதாந்தக் கொடுப்பனவு, தற்போது செலுத்தப்படும் சம்பளங்களுக்கும் ஏனைய கொடுப்பனவுகளுக்கும் மேலதிகமான ஒரு “இடைக்கால கொடுப்பனவாக” செலுத்தப்படும்.

12. இந்த சுற்றறிக்கை பொது திறைசேரியின் இணக்கப்பாட்டுடன் வெளியிடப்படுகின்ற அதேவேளை, இங்கு குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களை செயற்படுத்தும் பொழுது தெளிவுபடுத்தல்கள் தேவைப்படுமாயின், தாபன பணிப்பாளர் நாயகத்தினை தொடர்பு கொள்ள வேண்டும். (தொலைபேசிஇலக்கம்: 011 2688330, மின்னஞ்சல் : dge@pubad.gov.lk)

ஒப்பம்/ பி.பீ. அபேகோன்
செயலாளர்
அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு